# 24 திருப்புகழ்மாலை



படம் 24.1 திருப்புகழ்மாலையை செபித்தல்

தினமும் குறிப்பிட்ட வேளைகளில் இறைவனைப் புகழ்வதற்காக திருச்சபையால் அதிகாரபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட செபமே திருப்புகழ்மாலை எனப்படுகின்றது.

திருப்புகழ்மாலை நான்கு வேளைகளில் செபிக்கப்படுகின்றது.

1. காலை வேளை
2. மதிய வேளை
3. மாலை வேளை
4. இரவு வேளை

எக்காலத்திற்கும் உரியவராகிய இறைவனை ஒவ்வொரு வேளையும் இடையறாது புகழ்வது ஏற்புடையதாகும். திருப்பலியும் திருப்புகழ்மாலையும் தினமும் நடைபெறுவதால் அன்றைய நாள் முழுவதும் புனிதப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு இடையறாது ஒவ்வொரு வேளையும் இறைவனைப் புகழ்வதால் எக்காலமும், எல்லா நாட்களும், எல்லா வேளையும் இறைவனுக்கு உரியதாகும். எனவே இராகு (கெட்ட) காலம் என ஒன்று இருக்கமுடியாது. எக்காலமும் நன்மையானதும் சிறப்பானதும் ஆகும்.

திருபுகழ்மாலையை செபிக்கும் வேளைகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. காலை திருப்புகழ்மாலை
2. மதிய திருப்புகழ்மாலை
3. மாலை திருப்புகழ்மாலை
4. இரவு திருப்புகழ்மாலை

மாலை திருப்புகழ்மாலை வெஸ்பர் எனவும் அழைக்கப்படுகின்றது. ஆலயத்திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் இறுதிநாள் மாலை வழிபாடு மாலைத் திருப்புகழ்மாலையின் அடிப்படையில் நடைபெறுவதால் மாலை ஆராதனை அல்லது வெஸ்பர் என அழைக்கப்படுகிறது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் இது நாளிகை திருவழிபாடு (Listurgy of the hours) என அழைக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கருத்து இதனால் தெளிவுபடுத்தப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் இது ''கட்டளைச் செபம்'' (The Divine office) என அழைக்கப்பட்டது. விசேடமாக குருக்களும் துறவிகளும் கட்டாயமாக இச்செப வழிப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என்பதே கட்டளைச்செபம் என்பதால் எடுத்துக்காட்டப்படுகின்றது. இது திருச்சபையின் அதிகாரபூர்வ செபம் எனவும் அறிமுகம் செய்யப்படுகின்றது.

'இடைவிடாது செபித்தல்' பற்றிய திருத்தூதர்களின் படிப்பினைக்கேற்ப (1தெச 5:17, எபே 6:18) திருப்புகழ்மாலையைப் பகலும் இரவும் செபிக்கும் போது அன்றைய நாள் முழுவதும் புனிதப்படுத்தப்படுகின்றது. காலை, மாலை திருப்புகழ்மாலையை செபிப்பது குருக்கள் துறவிகளின் முதற்பணியாகும். திருச்சபையின் பொதுச்செபமாகிய இத்திருப்புகழ் மாலையை செபிக்கும் போது இறைமக்கள் அனைவரும் திருமுழுக்கினால் பெறும் குருத்துவத்தில் பங்கு பெறுகிறோம். இறைதந்தையை நோக்கி தம் உடலோடு (திருச்சபையோடு) ஒன்றித்துக் கிறிஸ்துவே எழுப்புகின்ற செபமாகவும் திகழ்கின்றது (திவ, எண். 84) முறையாகச் செபிக்கும் போது மணமகனுடன் உரையாடும் மணமகளின் குரலாக அமைகின்றது.

திருப்புகழ்மாலை திருவிவிலியத்தின் திருப்பாடல்களிலிருந்து எடுக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்ட புகழ்ச்சிச் செபமாகும்.

திருப்புகழ்மாலையின் புகழ்ச்சிப்பாடல்களில் மூன்று மாத்திரம் நற்செய்தி நூலிலிருந்து எடுக்கப்படுகின்றன. அவைகள் லூக்கா நற்செய்தியில் உள்ளன.

காலை வேளை - செக்கரியாவின் புகழ்ச்சிப்பாடல் (லூக்கா 1:68-79)

மாலை வேளை - மரியாவின் புகழ்ச்சிப் பாடல் (லூக்கா 1:46-55)

இரவு வேளை - சிமியோனின் புகழ்ச்சிப் பாடல் (லூக்கா 2:29-32)

## திருப்புகழ்மாலையின் ஆரம்பமும் வளர்ச்சியும்.

திருப்புகழ்மாலை ஒரு புதிய செபமல்ல. ஆரம்பத்தில் யூதமக்கள் செபக்கூடங்களில் திருப்பாடலிலுள்ள பாடல்களை தமது செபங்களில் பயன்படுத்திப் பாடினர். இயேசுவும் அவருடைய சீடர்களும் செபக்கூடங்களில் ஒன்றுசேர்ந்து இச்செபங்களில் பங்குபற்றினர். இத்தகைய தொன்மையான மரபைப் பின்பற்றியே திருப்புகழ்மாலை தொகுக்கப்பட்டது.

திருத்தூதர் காலத்தில் குறிப்பிட்ட நேரங்களில் திருப்புகழ்மாலை செபிக்கப்பட்டது பிற்காலத்தில் ஆயரின் தலைமையில் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரின் பங்குபற்றுதலோடு செபிக்கப்பட்டது. திருப்புகழ் மாலை பாரம்பரியம் எருசலேமில் இருந்ததாக ஸ்பானிய இனத்தைச் சேர்ந்த பெண் துறவியான 'எஜேரியா' என்பவர் கி.பி 381 -384ல் எருசலேம் திருயாத்திரை மேற்கொண்டபோது தமது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

நான்காம் நூற்றாண்டில் மதச் சுதந்திரம் கிடைத்ததையடுத்து துறவற சபைகளில் முன்னேற்றம் காணப்பட்டதால் திருப்புகழ் மாலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. மேற்றிராசன ஆலயந்தோறும் ஆயர் தலைமையில் கத்தோலிக்க குழுமியங்களினால் செபிக்கப்பட்ட இச் செபம் ஆசனக்கோவில் திருப்புகழ்மாலை எனவும், துறவற இல்லங்கள் தோறும் துறவற குழுமியங்களினால் செபிக்கப்பட்ட இச்செபம் துறவற திருப்புகழ்மாலை எனவும் அறிமுகம் செய்யப்பட்டு வந்தது.

காலப்போக்கில் துறவற சபைகளில் திருப்புகழ்மாலையின் இலகு தன்மை மாற்றப்பட்டு நீண்ட வேளைச் செபமாக்கப்பட்டது. செபிக்க வேண்டிய வேளைகளில் எண்ணிக்கையும் ஈடுகொடுக்க முடியாதவாறு அதிகரித்தது. அதனால் பொது நிலையினர் திருப்புகழ்மாலை செபிப்பதிலிருந்து விலகிக் கொண்டனர். திருப்புகழ்மாலைக்குப் பதிலாக பொதுநிலையினருக்கான வேறுசெபங்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டன. காலை, மதியம், மாலை செபங்களுககுப் பதிலாக மூவேளைச் செபம் அறிமுகப்படுத்தப்பட்டது. செபமாலையும் திருப்புகழ்மாலைக்குப் பதிலாக செபிக்கப்படும் செபமாகக் கருதப்படுகிறது.

துரதிஷ்டவசமாக திருப்புகழ்மாலை குருக்கள் துறவியருக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட செபமாக நடைமுறையில் இருப்பதோடு, பொது நிலையினருள் அநேகமானோர் இச்செபம் தொடர்பாக ஒன்றும் அறியாதவர்களாக இருக்கின்றனர் ஆயினும் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து குடும்பமாகவும் தனியாகவும் அல்லது ஓர் அமைப்பு ரீதியாகவும் திருப்புகழ்மாலையை செபிக்க முடியுமேயானால் அது மிகவும் ஏற்புடையதாகும்.

## காலை மாலை திருப்புகழ்மாலையின் அமைப்பு

- அழைப்பு
- ஆரம்ப பாடல்
- முதல்வர் : முன்மொழி 1
- எல்லோரும் : முதலாவது திருப்பாடல்
  திரித்துவப் புகழ்
- முதல்வர் : முன்மொழி 2
- எல்லோரும் : இரண்டாவது திருப்பாடல்
  திரித்துவ புகழ்
- முதல்வர் : முன்மொழி 3
- எல்லோரும் : மூன்றாவது திருப்பாடல்
  திரித்துவபுகழ்
- அருள் வாக்கு
- சிறு மறுமொழி
- முதல்வர் : முன்மொழி (நற்செய்தி புகழ்ச்சிப் பாடலுக்கானது)
- எல்லோரும் : செக்கரியாவின் பாடல் (காலை)
  : மரியாவின் புகழ்ச்சிப் பாடல் (மாலை)
  : திரித்துவ புகழ்
- மன்றாட்டுக்கள்.
- இயேசு கற்பித்த செபம்

✦ இறுதி மன்றாட்டு

✦ திருப்புகழ் மாலை நிறைவு.

**செயற்பாடு**

1. 'திருப்புகழ்மாலை' என்ற பெயரால் இச் செபம் அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

2. திருப்புகழ்மாலை செபிக்கப்படும் வேளைகள் நான்கையும் தருக.

3. திருப்புகழ்மாலையில் கட்டாயமாக பயன்படுத்தப்பட வேண்டிய திருவிவிலிய நூலின் பெயரை எழுதுக.

4. மாலை வேளை திருப்புகழ் மாலையின் முக்கியத்துவத்தை விளக்குக.

5. மாலை வேளை திருப்புகழ் மாலையைக் குறிக்கும் வேறு ஒரு பெயரைத் தருக.

**வாழ்க்கைக்கு**

மாலை ஆராதனையில் பங்கு பற்றி இறைவனைப் புகழ்வோம்.